**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.20/2009**

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 17.10.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பழனிவேல் | Father's Name | : இராமசாமி |
| Village | : | தெற்குகாடு | Taluk | :ஆத்தூர் |
| Calling | : | விவசாயம் | Age | :71 |

துவக்க நேரம்:12.50

<u>**1,5,6** பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்திற்கு அருகில் வீடு, நிலம் எதாவது உள்ளது என்றால் இல்லை. 1 கி.மீ தள்ளி உள்ளது.

2) நான் ஆத்தூர் நகரில் உள்ள புதுப்பேட்டையில் குடியிருக்கிறேன் என்றால் ஆமாம். எனக்கு வளையமாதேவி கிராமத்தில் சொத்து, வீடு உள்ளதாக முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

3) வளையமாதேவி என்பது எந்த தாலுக்காவைசேர்ந்தது என்றால் ஆத்தூர் தாலுக்காவை சேர்ந்தது. வாதிகள் மூவரும் எனக்கு என்ன உறவு என்றால் நண்பர்கள். தவா சொத்திலிருந்து 1 கி.மீ தொலைவில் வீடு, நிலம் உள்ளதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4) நான் குடியிருக்கும் இடத்திலிருந்து வழக்கு சொத்து அமைந்துள்ள இடம் 7 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் என் தோட்டதிலிருந்து அவருடைய தோட்டத்திற்கு உள்ள தூரம் 1 கி.மீ தூரம். வழக்கு சொத்து அமைந்துள்ள இடத்திலிருந்து 1 கி.மீ தூரத்தில் எனக்கு தோட்டம் அமைந்துள்ளதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கு எந்த சர்வே எண்ணிற்கு நடக்கிறது என்று தெரியுமா என்றால் சர்வே எண்.127/பி1 க்கு நடக்கிறது. பச்சமுத்துவின் அப்பாவான தங்கவேல் வழக்கிற்கு தொடர்புடைய சொத்தை எந்த வருசத்தில் வாங்கினார் என்றால் 1982 ல் கிரையம் வாங்கினார். அதில் எத்தனை செண்ட் கிரையம் வாங்கினார் என்றால் ஏக்கர் 2.51 செண்ட் வாங்கியுள்ளார்.

6) தங்கவேல் வாங்கிய சொத்தின் முழு விஸ்தீரனமும் ஏக்கர் 2.51 என்றால் ஆமாம். அது தடத்தோடு சேர்த்துதான் ஏக்கர் 2.51 ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 கடந்த 1982 ஆம் வருடத்திய தங்கவேல் என்பவரின் கிரைய பத்திர ஆவணம்தான். இதில சர்வே எண்.127/2 ற்கு விஸ்தீரனம் ஏக்கர் 2.51 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏக்கர் 2.51 தடம் உட்பட என்று உள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் வடபுறம் தென்வடக்கில் 9 அடி அகலமும், கிழ மேல் 210 அடி நீளமும் உள்ளதடத்தில் நீரும், நானும் ஆட்கள், கால்நடைகள் மற்றும் வண்டிகளை ஓட்டிக்கொண்டு வரபோக தடப்பாத்தியம் உள்ளது என்று உள்ளது.

7) கிரைய பத்திரத்தில் (வா.சா.ஆ.1) ஜெயராமன் மற்றும் தங்கவேலுக்கு வண்டி தட பாத்தியம் இருவருக்கும் பாத்தியப்பட்டது என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயராமனுக்கு மீதி நிலம் அந்த இடத்தில் இருந்ததால் அந்த வண்டிதட பாத்தியத்தில் ஜெயராமனுக்கு பாத்தியம் குறிப்பிட்டு எழுதிக்கொடுக்ககப்பட்டது என்றால் சரிதான்.

8) அடி நிலம் ஏக்கர் 2.51 ல்தான் வண்டிபாதை உள்ளது என்றால் சரிதான்.

ஜெயராமனுக்கு இருந்த மீதி நிலத்தை யாருக்கு விற்பனை செய்தார் என்றால் பச்சியாப்பிள்ளைக்கு கொடுத்தார். அந்த பச்சியாப்பிள்ளைக்கு கொடுத்த கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்( பி.வா.த.சா.ஆ.1) வண்டிப்பாதை என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழி நடைப்பாத்தியங்கள் என்று எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது.

9) ஜெயராமன் பச்சியாப்பிள்ளைக்கு எழுதிக்கொடுத்த கிரைய தேதியிலேயே வடிவேல்பிள்ளை என்பவருக்கு ஜெயராமன் ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். 40 செண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்.

10) ஆறுமுகப்பிள்ளையும் பச்சியாப்பிள்ளையும் முறையே தந்தை மற்றும் மகன் என்றால் அது எனக்கு தெரியாது. ஆறுமுகப்பிள்ளை மற்றும் பச்சியாப்பிள்ளையிடமிருந்து கடந்த 09.09.1987 ல் ஒரு இராமசாமி கவுண்டர் கிரையம் பெற்றார் என்றால் ஆமாம். இராமசாமி என்பவர் 1, 2 வாதிகளான பழனியப்பன் மற்றும் கந்தன் ஆகியோர்களின் தந்தை என்றால் சரிதான்.

11) கடந்த 09.09.1987 ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்தில், கடந்த 04.04.1983 ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 04.04.1983 பத்திரத்தில் இல்லாத "வண்டிப்பாதை பாத்தியம்" என்ற வார்த்தை 09.09.1987 ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்தில் புதிதாக சேர்த்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த பாதையில்தான் அவர்கள் போய், வந்துக்கொண்டிருக்கிறார்கள்.

12) 09.09.1987 தேதியிட்ட கிரைய பத்திர சொத்து விவரத்தில் குறிப்பாக பின்வரும் வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும், அவை " மேற்படி நிலத்தின் மேற்புறம் வளையமாதேவி கிராம மெயின்ரோடு வரை உள்ள தடத்தின் வழியாக வண்டி, வாகனங்கள், ஆட்கள், கால்நடைகள் போக, வர மாமூல் தடப்பாத்தியமும் உட்பட "என சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எழுதாமல் விட்டுவிட்டார்கள்.

அந்த தடம் FMB ல் உள்ளது. அதை பார்த்துதான் 1987 ல் அவர் கிரையம் வாங்கினார்.

13) 1987 ல் எழுதப்பட்ட பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எழுதவில்லை. ஜெயராமன் என்பவர் வடிவேல்பிள்ளைக்கும், பச்சியாப்பிள்ளைக்கும் அவரது நிலங்கள் அனைத்தையும் விற்றுவிட்டதால் ஜெயராமனுக்கு அந்தயிடத்தில் நிலங்கள் எதுவும் இல்லையென்றால் சரிதான்.

14) ஜெயராமன், வடிவேல்பிள்ளைக்கும், பச்சியாப்பிள்ளைக்கும் வண்டிதடத்தை எழுதிக்கொடுக்காததால் அந்த வண்டிதட பாத்தியத்தை வடிவேல்பிள்ளையும், பச்சியாப்பிள்ளையும் உரிமை கோர முடியாது என்றாலும், 1,5,6 பிரதிவாதிகளுக்கு மட்டும்தான் முழு உரிமையும் உள்ளது என்றாலும் சரியல்ல. அந்த வண்டி தடத்தின் வழியாகதான் வாதிகள் அவர்கள் கிரையம் பெற்றதிலிருந்து போய் வந்துக்கொண்டிருக்கிறார்கள்.

15) தவா வண்டிப்பாதையில் வாதிகளோ, மற்ற வேறுநபர்களோ தவா வண்டிப்பாதையில் பாதையை இதுவரை பயன்படுத்தவில்லை என்றாலும், தற்பொழுது இந்த வண்டிப்பாதையில் உரிமை கோர முடியாது என்றாலும் சரியல்ல. அந்த வண்டிப்பாதையைதான் வாதிகள் பயன்படுத்திவருகிறார்கள்.

16) இராமசாமி கவுண்டர், பச்சியாப்பிள்ளையிடம் கிரையம் பெறுவதற்கு முன்பாக, பச்சியாப்பிள்ளையிடம் கிரையம் பெற்ற சொத்திற்கு கிழபுறத்தில் இராமசாமிக்கு ஏற்கனவே சொத்து இருந்தது என்றால் இல்லை. பச்சியாப்பிள்ளையிடம் பெற்ற நிலம்மட்டும்தான். அதில்தான் அவர் வீடு கட்டியுள்ளார்.

17) அதற்கு பின்னிட்டு வாதிகளான பழனியப்பன் மற்றும் கந்தன் ஆகியோர்கள் ஏற்கனவே விற்கிரையம் செய்த பச்சியாப்பிள்ளை, அவரது தாயார் ஆராயியம்மாள் மற்றும் பச்சியாப்பிள்ளையின் மகன்கள் சக்திவேல் , மணிவேல் ஆகியோர்களிடமிருந்து கடந்த 07.01.2009 அன்று ஒரு தடப்பாத்தியம் பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான்.

18) கடந்த 1987 ல் பச்சியாப்பிள்ளை அந்த நிலத்தை விற்றபிறகு, அவருக்கு வேறு நிலங்கள் எதுவும் அந்தயிடத்தில் இல்லையென்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 வாரத்திற்கு முன்பு தான் இந்த தடப்பாத்திய பத்திரம்(வா.த.சா.ஆ-2) பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணம் 22 வருடத்திற்கு பிறகு ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள தடப்பாத்திய உரிமை, தவா தடப்பாத்தியத்தில் 1/3 பாத்திய உரிமை இருப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றாலும் இந்த வாசகம் பி.வா.த.சா.ஆ.1,வா.த.சா.ஆ.10 ல் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். 1984 UDR க்கு பிறகு உட்பிரிவு செய்தபிறகு எழுதப்பட்டது.

19) இந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு, வழக்கு தவாவில் உள்ள தடத்தை வந்து பார்வையிட்ட தகவல் தெரியுமா என்றால் தெரியும். ஆணையர் அறிக்கையில் வண்டி தடம் 9 அடி அகலம் என்று குறிப்பிட்டு எழுதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த இடம் 11 அடி, அந்த தடத்தை கல், மண் போட்டு நெருக்கிவிட்டார்கள்.

20) ஆணையர் அறிக்கையிலும், வரைபடத்திலும் அந்த தடத்திற்கு தென்புறத்தில் 15 வயதுடைய தென்னை மரங்கள் கிழமேலாக இருந்ததாக குறிப்பிட்டு காட்டியுள்ளார் என்றால் சரியல்ல. கடந்த 2009 ஆம் ஆண்டு அந்த தென்னை மரங்கள் எல்லாம் சின்ன மரங்கள். தற்பொழுது அந்த மரங்களுக்கு 15 வயதிருக்கும்.

21) தவா பாதைக்கு வடபுறத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால் ஆறுமுககோணார் நிலம் உள்ளது. இந்த பாதையை அகலப்படுத்த ஆறுமுககோணார் அவருடைய சொத்தில் இடம் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. தென்னை மரங்களுக்கு தற்பொழுது 30 வயதிருக்கும் என்றாலும், 15 வயது என்று நான் முரண்பட்டு சொல்கிறேன் எ ன்றாலும் சரியல்ல. முதன்மை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

22) UDR க்கு பிறகு FMB ல் தடம் 4.4 மீட்டர் அகலம் என்று இருந்திருந்தால் வழக்கறிஞர் ஆணையர் 2009 ல் தடத்தை பார்வையிட்டு, அளவிட செய்யும்பொழுது மேற்சொன்ன FMB ல் இருந்ததாக சொல்லும் 4.4 மீட்டரை குறிப்பிட்டிருப்பார் என்றாலும்,

மாறாக அந்த தடம் எவ்வளவு அகலத்திற்கு உள்ளதோ அதனை சரியாக அளந்து 9 அடி என்றுதான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும், இதுதான் உண்மை என்றாலும், வழக்கை தாக்கல் செய்வதற்கு வண்டிதடப்பாத்தியத்தை ஏற்படுத்தி கொள்வதற்காக ஒரு புல வரைபடத்தை தயார் செய்து, அதனடிப்படையில், வண்டிதடப்பாத்திய கிரைய பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. UDR மற்றும் FMB ல் உள்ளதுதான் சரி.மேற்சொன்ன UDR மற்றும் FMB ல் உள்ள அளவு தவறு என்றால் சரியல்ல.

23) பிரதிவாதி 1,5,6 க்கு மட்டுமே பாத்தியப்பட்ட வண்டிபாதையை மட்டும் உட்பிரிவு செய்து, தவறான நீள, அகலங்களை குறிப்பிட்டு, தவறான பெயர்களை சேர்த்து பச்சியாப்பிள்ளை குடும்பத்திற்கும், வாதிகளின் குடும்பத்திற்கும் தலா 1/3 வண்டிதடப்பாத்தியம் இருப்பதாக ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

24) தவா சொத்து வழியாக நான் செல்ல வேண்டிய அவசியம் இல்லையென்றால் சரியல்ல. எனது நண்பர்களை பார்ப்பதற்காக அங்கு போவேன். நான், வாதிகளுக்கு நண்பர்கள் என்று சொல்லுவது தவறு என்றாலும், அவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால், அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 02.10 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional Distrit Munsif,(FAC) Attur

Typed by R.Ramya - O.S. No.20/2009 , Dt.17.10.2024